செ.வெ.எண்: 821/2016 நாள்: 24.11.2016

**பத்திரிகை செய்தி**

தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை மூலம் மத்திய அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை மற்றும் நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்கள் நன்னீர் மீன் வளர்ப்பு / உவர்நீர் இறால் வளர்ப்பு மேற்கொள்ள ஏதுவாக கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

**1. புதிய மீன்பண்ணைக் குளங்கள் குட்டைகள் அமைத்தல்:**

ஒரு ஹெக்டேர் மீன் வளர்ப்புக் குளம் அமைத்திட ஆகும் செலவினத்தொகை ரூ.7.00/- இலட்சத்தில் 50 விழுக்காடு ரூ.3.50/-இலட்சம் மானியத்தொகை ஒரு ஹெக்டேருக்கு வழங்கப்படும்.

**2. ஏற்கனவே உள்ள மீன் வளர்ப்பு குளங்கள்/தொட்டிகளை சீரமைத்தல் புதுப்பித்தல்:**

ஒரு ஹெக்டேருக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.3.50/- இலட்சத்தில் 50% மானியம் ரூ.1.75 இலட்சம் வழங்கப்படும்.

**3. நன்னீர் மீன் வளர்ப்பு இடுபொருள் செலவினம்:**

ஒரு ஹெக்டேர் மீன் வளர்ப்பிற்கு ஆகும் செலவினத்தொகை ரூ.1.50/- இலட்சத்தில் 50 விழுக்காடு மானியம் ரூ.0.75 இலட்சம் வழங்கப்படும்.

**4. உவர் நீர் இறால் வளர்ப்பு இடுபொருள் செலவினம்:**

ஒரு ஹெக்டேர் மீன் வளர்ப்பிற்கு ஆகும் செலவினத்தொகை ரூ.3.00 இலட்சத்தில் 50மூ விழுக்காடு மானியம் ரூ.1.50 இலட்சம் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து அதிகம் பெறப்படின், முன்னுரிமை மற்றும் தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள். விருப்பமுள்ளவர்கள் / விவசாயிகள் இந்த விளம்பரம் வெளிவந்த 30 நாட்களுக்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் செயல்படும் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தினை நேரில் தொடர்பு கொண்டு உரிய விவரம் பெற்று பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம்,**
**டிஸ்டிலரி ரோடு,**
**வடசேரி பேருந்து நிலையம் மேல்புறம்,**
**வடசேரி, நாகர்கோவில் - 629001.**
**தொலைபேசி எண்.04652-227460**

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இ) நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.